**பேஸ் லைன் வீதிச் செயற்திட்டம் - கட்டம் III - 2019**

----------------------------------------------------------------------------------------------------

பேஸ் லைன் வீதி செயற்திட்டம் - கட்டம் III இன் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இச் செயற்திட்டமானது 2009 நவம்பர் 19 இல் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் கீழ் அமுலாக்கப்படுகின்றது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

----------------------------------------------------------------------------------------------------

தற்போது நெடுஞ்சாலைகள் அமைச்சு என அழைக்கப்படுகின்ற முன்னைய நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சு செயற்திட்ட நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. கிருலப்பனையிலிருந்து கொழும்பு – ஹொரணை வீதிக்கு 860 மீற்றர்கள் நீளமான புதிய வீதியொன்றை நிர்மாணிப்பதன் மூலம் வீதி போக்குவரத்து நெரிசலைக் குறைப்பது செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். காணி சுவிகரிப்பின் கிரயம் ரூபா 3,500 மில்லியனாக மதிப்பிடப்பட்டிருந்த அதேவேளை செயற்திட்டத்திற்கான சிவில் வேலைகளின் கிரயம் ரூபா 7,041.29 மில்லியனாக மதிப்பிடப்படடிருந்தது.

**1.3 அபிப்பிராயம்**

----------------------

செயற் திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாரான நிதி நிலைமையியையும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

----------------------------------------------------

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

----------------------------------------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில், கருத்திட்டத்தின் தொடர்ந்தியங்கும் ஆற்றலினை மதிப்பீடு செய்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். கருத்திட்டத்தினை கணக்கொழிப்பதற்கு முகாமைத்துவம் கருதுமாயின் அல்லது மாற்றீடு இல்லாதவிடத்து செயற்பாடுகளை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தாலேயொழிய தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கருவின்

அடிப்படையில் கணக்குகளை பேணுதல் மற்றும் கருத்திட்டத்தின் தொடர்ந்தியங்குவதற்குரிய விடயங்களை வெளிப்படுத்தல் என்பன முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

கருத்திட்டத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக ஏடுகளும் அறிக்கைகளும் பேணப்படுதல் அவசியமாகும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான

சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| இல | கணக்கீட்டுக் குறைபாடுகள் | தொகை ரூபா மில்லியன் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | செலுத்தவேண்டிய இழப்பீடுகள் மீதான வட்டிக்கான ஏற்பாடு ரூபா 7.53 மில்லியன் தொகை மீளாய்வாண்டிற்காக துண்டு இல 31 இற்காக நிதிக்கூற்றுக்களில் செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் பெறுபேறாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த ரூபா 211.45 மில்லியன் அட்டுறு வட்டி 7.57 மில்லியனினால் குறைவாக காட்டப்பட்டிருந்தது. | 7.57 | பொறுப்புக்களின் குறைமதிப்பீடு. | உடன்பட்டனர். இவ்விடுபாடு இப்போது சரிசெய்யப்பட்டுள்ளது. | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ள செலுத்த வேண்டிய மீதிகள் சரியாக கணக்கிற்கு கொண்டுவரப்படல் வேண்டும். |
| (ஆ) | ரூபா 7.37 மில்லியன் வித்தியாசம் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள காணி சுவீகரிப்பு மீதான இழப்பீட்டு பெறுமதி மற்றும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட இழப்பீட்டு பட்டியலில் காட்டப்பட்டுள்ள பெறுமதி என்பவற்றிற்கிடையே அவதானிக்கப்பட்டது. | 7.37 | பிழையான தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக் கவில்லை. | உடன்பட்டனர், இது மேற்பார்வையின் காரணத்தால் ஆகும். செலுத்தப்பட்ட டபல்யுஎச்டி (WHD) தொகை இப்போது இழப்பீடுகள் மீதான வட்டி கணக்கிற்கு மாற்றப்பட்டது. | நிதிக்கூற்று பட்டியல்கள் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள பெறுமதிகளுடன் உடன்படல் வேண்டும். |

3 **ஒப்பந்த நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| இல | கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | பேஸ் லைன் வீதி செயற்திட்டம் - கட்டம் III ஆனது ரத்மலானையில் கிருவப்பானை தொடக்கம் மெலிபன் சந்தி வரையான வீதியின் 7.42 கி.மீ நீளத்தினை நிர்மானிப்பதற்கு 2004 ஆகஸ்ட் 12 இலான அமைச்சரவை அமைச்சர்களின் அனுமதியின் பிரகாரம் 2004 இல் ஆரம்ப கட்டமாக தொடங்கப்பட்டிருந்தது. இருப்பினும், மேலுள்ள செயற்திட்டத்தின் சிவில் நிர்மான வேலைகள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், சிவில் நிர்மான வேலைகளிற்கு தேவையான நிதி ஏற்பாடுகள் செயற்திட்டத்தினால் இன்னும் செய்யப்படாமல் இருந்தமை அவதானிக்கப்பட்டது. | எதிர்பார்க்கப்பட்ட நன்மைகள் அக்கறையுடைய தரப்பினர்களிற்கு கிடைக்கமுடியாமல் இருப்பதுடன் செயற்திட்டத்தின் கிரயம் அதிகரிப்பதற்கான சாத்தியம். | சிவில் வேலைகளிற்கான நிதி வேண்டுகோள் ஈஆர்டி இற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் செயற்திட்ட பிராந்தியத்திலுள்ள காணிகளின் 75% இனை சுவீகரிக்காமல், ஈஆர்டி அடுத்த கட்டத்தனை முன்னெடுக்க முடியவில்லை. அவ்வாறான காரணங்கள் காரணமாக சிவில் வேலைகளிற்கான ஒப்பந்ததாரரினை தெரிவு செய்வதற்கான பெறுகையின் ஆரம்பிப்பு சாத்தியமாகும். | செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை துரிதப்படுத்த நடைமுறைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 15 காணி உரிமையாளர்களிற்கான மொத்தமாக ரூபா 699.25 மில்லியன் இழப்பீட்டு தொகையில், 3 காணி உரிமையாளர்களிற்கான இழப்பீட்டு தொகை மொத்தமாக ரூபா 230 மில்லியன் மாத்திரமே மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது. அதன் பெறுபேறாக, 12 காணி உரிமையாளர்களுடன் தொடர்பான இழப்பீடு மொத்தமாக ரூபா 469.3 மில்லியன் செயற்திட்டத்திற்கான நிதி வசதிகளின் குறைபாடு காரணமாக 2019 திசெம்பர் | இழப்பீடகள் மீதான கொடுப்பனவுகளை கொடுத்துதீர்ப்பதில் தாமதத்தின் மீதான வட்டி அதிகரிப்பதற்கான சாத்தியம். | உடன்பட்டனர். அரசாங்கத்தின் வரையறுத்த பாதீட்டின் காரணமாக, காணி சுவீகரிப்பிறகான போதுமான நிதிகள் செயற்திட்டத்திற்கு உரிய நேரத்தில் கிடைக்கப்பெறவில்லை. கொடுப்பனவுகளின் தாமதத்தின் காரணமாக மேலதிக 7% வட்டி சனவரியிலிருந்து செலுத்த வேண்டும். | காணி சுவீகரிப்பின் செயன்முறையின் அமுல்படுத்தலை விரைவுபடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | 31 இல் உள்ளவாறு கூட கொடுத்துதீர்க்கப்படாமல் மீதமாக காணப்பட்டது. அதற்கு மேலதிகமாக, 7 சதவீதமான வட்டி ரூபா 211.45 மில்லியன் மேலுள்ள இழப்பீட்டினை கொடுப்பதன் தாமதத்தின் காரணமாக 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் வழங்கப்பட்டிருந்தன. | | | |
| (இ) | கிடைக்கப்பெற்ற வேலைகள் பரப்பின் அடிப்படையில் 200 காணித்துண்டுகள் கொள்வனவு செய்ய வேண்டி இருப்பினும், செயற்திட்டமானது 15 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் 31 காணித்துண்டுகளை மாத்திரமே கொள்வனவு செய்திருந்ததுடன் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இழப்பீடு ரூபா 675 மில்லியனை செலுத்தியிருந்தது. | பேஸ் லைன் வீதி செயற்திட்டம் இன் நிர்மானத்தினை ஆரம்பிப்பதில் தாமதத்திற்கான சாத்தியம். | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சரிசெய்யப்பட்ட மொத்த செயற்திட்ட பகுதி 317 ஆனதுடன் 2020 ஜூன் 30 இல் உள்ளவாறு அது 200 துண்டுகளில் 397 ஆக இருந்தது. 2020 ஜூன் 30 இல் உள்ளவாறான காணி சுவீகரிப்பு செயன்முறையின் மொத்த செயலாற்றல் 79% ஆகும். காணி சுவீகரிப்பிற்காககட்டுப்பாட்டிலுள்ள நிதி செயற்திட்டத்தின் முன்னேற்றத்திற்கு குறிப்பிட்டளவு தாக்கத்தினை ஏற்படுத்தியிருந்தது. | ஒட்டுமொத்த திட்டத்தினை கருத்தில் கொண்டு, அடையக்கூடிய இலக்குகள் தொகுக்க தீர்மானிக்கப்பட வேண்டியதுடன் ஒதுக்கீடுகள் அதனடிப்படையில் வேண்டப்படலும் வேண்டும். |